டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 4.09.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 065 - Madurai | Online Edition

# அரியலூர் மாவட்டத்தில் பள்ளி மாணவர்களுக்கான இரண்டு நாள் பயிலரங்கு நடைபெற்றது



புது தில்லி, செப்.3

தமிழ்நாட்டில் அரியலூர் மாவட்டத்தில் நான்கு பள்ளிகளில் ஜிக்யாசா அடல் இரண்டு நாள் பயிலரங்கு 2 மற்றும் 3.09.26-ம் தேதிகளில் நடைபெற்றது. சிஎஸ்ஐஆர் சென்னை வளாகத் துடன் இணைந்து சிஎஸ்ஐஆர் கட்டமைப்பு பொறியியல் ஆராய்ச்சி மையம் இதற்கு ஏற்பாடு செய்திருந்தது.

உரையாடல் சார்ந்த இப்பயிலரங்கு மேலனிக்குழி அரசு மேல்நிலைப் பள்ளி, செந்துரை அரசு ஆடவர் மேல்நிலைப் பள்ளி, கோடலிகருப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளி, கொல்லபுரம் அரசு உயர்நிலைப் பள்ளி ஆகிய இடங்களில் நடைபெற்றது. அடல் சிந்தனை ஆய்வகம் அணுகல் மற்றும் வழிகாட்டல் திட்டத்தின் ஒரு பகுதியான இந்த முன்முயற்சியில் சுமார் 300 மாணவர்களும், 30 ஆசிரியர்களும் பங்கேற்றனர்.

அறிவியல் ஆர்வத்தையும், செய்முறைக் கற்றலையும் வளர்க்கும் வகையில் அறிவியல் சார்ந்த விரிவுரைகள், நேரடிச் செயல்முறை விளக்கங்கள், நேரடிப் பரிசோதனைகள் ஆகியவை நடத்தப்பட்டன.

மாணவர்கள் நாள்தோறும் பயன்படுத்தப்படும் பொருட்களைக் கொண்டு எல்இடி பல்புகளுக்கு மின்சாரம் செலுத்த எளிய மின்கலன்களை உருவாக்கினார்கள். அத்துடன், செப்புக் கம்பி, பாதுகாப்பு ஊசிகள், கையடக்க மின்கலன்களைப் பயன்படுத்தி இயங்கும் டிசி மோட்டார்களையும் தயாரித்தனர்.

டாக்டர் எஸ் மகேஸ்வரன், டாக்டர் ஜி எஸ் அய்யப்பன், டாக்டர் ஏ ஆபிரகாம், டாக்டர் டி கல்பனா, டாக்டர் ஜி சரவணன், டாக்டர் எஸ் சுந்தர் குமார், ஆர் டி சதீஷ் குமார் உள்ளிட்ட மூத்த சிஎஸ்ஐஆர் விஞ்ஞானிகள், இதில் கலந்து கொண்டு அறிவியல் தீர்வுகள் குறித்து மாணவர்களுக்கு விளக்கினார்கள்.

# காய்கறி சாகுபடி குறித்த பண்ணைப்பள்ளி பயிற்சி நிறைவு!



சேலம், செப்.3

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரம், வேப்பநத்தம் கிராமத்தில் காய்கறி பயிர் சாகுபடி குறித்த நான்காம் வகுப்பு பண்ணைப்பள்ளி பயிற்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது.

வேளாண்மை உதவி இயக்குனர் வேல்முருகன் தலைமை தாங்கிய இப்பயிற்சிக்கு, வேளாண் அலுவலர் ஜானகி முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில், காய்கறி பயிர்களின் அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை மற்றும் பாதுகாப்பு முறைகள் குறித்து உதவி தொழில்நுட்ப மேலாளர் முத்துவேல் விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார். தொடர்ந்து பேசிய பயிற்சியாளர் பிரவீன், காய்கறி பயிர்களைக் கொண்டு மதிப்பு கூட்டுதல் (Value Addition) செய்வதன் மூலம் எவ்வாறு லாபத்தை ஈட்டலாம் என்பது குறித்து செயல்முறை விளக்கங்களுடன் விளக்கமளித்தார். இதனைத் தொடர்ந்து, வட்டார தொழில்நுட்ப மேலாளர் சக்தி, விளைபொருள்களைச் சந்தைப் படுத்துதல், விலை நிலவரங்களை அறிந்து கொள்ளுதல் மற்றும் இடைத்தரகர்களைத் தவிர்த்து நேரடி விற்பனை செய்யும் உத்திகள் குறித்து விவசாயிகளுக்கு வழிகாட்டினார். நவீன தொழில்நுட்பங்களைப் பின்பற்றி சாகுபடி பரப்பை அதிகரிப்பது மற்றும் தரமான விளைபொருள்களை உற்பத்தி செய்வது குறித்து விரிவான ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இப்பயிற்சி முகாமில் இப்பகுதியைச் சேர்ந்த 25-க்கும் மேற்பட்ட முன்னோடி விவசாயிகள் மிகுந்த ஆர்வமுடன் கலந்து கொண்டு பயனடைந்தனர். விவசாயிகளின் சந்தேகங்களுக்கு வேளாண் அலுவலர்கள் உடனடி விளக்கமளித்தனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# வேப்பனப்பள்ளி வட்டார அட்மா திட்டத்தில் பன்னப்பள்ளி கிராமத்தில் வயல் விழா



கிருஷ்ணகிரி, செப்.3

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி வட்டாரத்தில் வேளாண்மைத் துறை மாநில விரிவாக்க திட்டங்களின் விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் (அட்மா) கீழ் பன்னப்பள்ளி கிராமத்தில் வயல் விழா பயிற்சி வழங்கப்பட்டது. இந்த விழாவை வேளாண்மை உதவி இயக்குநர் சிவநதி, தொடங்கி வைத்து உழவன் செயலி பயன்கள் மற்றும் வேளாண்மைத் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விளக்கம் அளித்தார்.

இந்த பயிற்சியின் போது, வேளாண்மை துணை இயக்குநர் (ஓய்வு) மனோகரன், பயறு வகை பயிறுக்கு விதை நேர்த்தி செய்தல், இயற்கை பூச்சி விரட்டி முறைகள், பஞ்சகாவ்யா, ஐந்திலை கரைசல், ஜுவாமிர்தம், மீன் அமிலம், மண்புழு உரம் தயாரித்தல், ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, அமிர்த கரைசல், கன ஜீவாமிர்தம், பசுந்தாள் உரம் தயாரித்தல், ராகி வரிசை நடவு முறை குறித்து விளக்கி கூறினார். இந்த பயிற்சியில் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

கலந்து கொண்ட விவசாயிகளுக்கு தொழில்நுட்ப கையேடு மற்றும் துண்டு பிரசுரம் வழங்கப்பட்டது. அத்துடன் இந்த பயிற்சியில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் கவிதா கலந்து கொண்டு உயிர் உர விதை நேர்த்தி செய்தல், தரமான வீரிய ரகங்களை தேர்வு செய்ய வேண்டும், சொட்டுநீர் பாசன திட்டத்தின் நன்மைகள், இயற்கை வேளாண்மை குறித்து விளக்கம் அளித்தார். உதவி தொழில்நுட்ப மேலாளர் பாரதிராஜா மற்றும் பிரியா கலந்து கொண்டு அட்மா திட்டத்தின் செயல் பாடுகள் குறித்து விளக்கம் அளித்தார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?

**30. நூடுல்ஸ் சூப்**

**தேவையான பொருட்கள்**

நூடுல்ஸ் — 1 கப்

கேரட் — கேப்

முட்டைக்கோஸ் — ¼ கப்

மிளகு தூள் — ½ டீஸ்பூன்

உப்பு — தேவையான அளவு

**செய்முறை**

காய்கறிகளை வேக வைத்து நூடுல்ஸ் சேர்த்து வேகவிடவும். மிளகு தூள், உப்பு சேர்த்து பரிமாறவும்.

தொகுப்பு : ***G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.***

**நாளை தொடரும்...**



# உயிரியல் காரணிகளை மானிய விலையில் பெற்று நோய் தாக்குதல்களிலிருந்து பயிர்களை காப்பாற்றி அதிக மகசூல் பெற அறிவுறுத்தல்

திண்டுக்கல், செப்.3

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டாரத்தில் வேளாண்மைத் துறையின் கீழ் உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம் செயல்பட்டு வருகிறது. இங்கு உயிரியல் முறையில் பூச்சி மற்றும் நோய்த் தாக்குதலை கட்டுப்படுத்தும் காரணிகளான டிரைக்கோ டெர்மா விரிடி, சூடோமோனாஸ் புளூரசன்ஸ், பேசில்லஸ் சப்டிலிஸ், மெட்டா ரைசியம் அனிசோ பிலே ஆகியவை ஆகியவை உற்பத்தி செய்யப் பட்டு வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது.

விவசாய பெருமக்கள் பயிர்களில் பூச்சி மற்றும் நோய்த் தாக்குதல் களைக் கட்டுப்படுத்த இரசாயன மருந்துகள் உபயோகிப்பதை தவிர்த்து மேற்கண்ட உயிரியல் காரணிகளை பயன்படுத்தி விவசாயிகள் நலம் பெற வேண்டும் எனவும் மேலும் சுற்றுச்சூழல் மாடுபடுவதையும் தவிர்க்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இதனடிப்படையில் பூஞ்சாணக் கொல்லியான டிரைகோடெர்மா விரிடி பயிர்களில் ஏற்படும் வேர முகல், தண்டு அழுகல் மற்றும் வாடல் நோய்களைக் கட்டுப்படுத்த பயன்படுகிறது. சூடோமோனாஸ் புளூசரன்ஸ் மற்றும் பேசிலஸ் சப்டிலிஸ் எனப்படும் பாக்டீரியல் கொல்லிகள் பயிர்களில் ஏற்படும் நெல் குலைநோய், நெல் இலையுறை அழுகல் நோய், நெல் இலைப் புள்ளி நோய், நாற்றழுகல் நோய், பருத்தி மற்றும் வாழை வாடல் நோய் மற்றும் மா, வாழையில் ஆன்ந்துரு ரக்னோஸ் நோய்களை கட்டுப்படுத்தப் பயன்படுகிறது. மெட்டா ரைசியம் அனிசோபிலே எனப்படும் பூஞ்சாணக் கொல்லி தென்னையில் காண்டாமிருக வண்டுப் புழு மற்றும் வேர்ப் புழுக்களை கட்டுப்படுத்த பயன்படுகிறது.

மேற்கண்ட உயிரியல் காரணிகள் அனைத்தும் நத்தம் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் மானிய விலையில் வழங்கப் படுகிறது. எனவே விவசாயப் பெருமக்கள் சரியான நேரத்தில் உயிரியல் காரணிகளைப் பெற்று முறைப்படி விநியோகிக்குமாறு நத்தம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மனோஜ் குமார் கேட்டுக் கொண்டுள்ளார்.

# மண் வள மேலாண்மை விவசாயிகள் பயிற்சி



சேலம், செப்.3

சேலம் மாவட்டம், கெங்கவல்லி வேளாண்மை துறை அட்மா திட்டத்தின் கீழ் மண்வள மேலாண்மை விவசாயிகள் பயிற்சி ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையத்தில் நடைபெற்றது. வட்டார தொழில்நுட்ப மேலாளர் அற்புத வேலன் வரவேற்று அட்மா திட்டங்களை பற்றி எடுத்துரைத்தார். சிறப்பு அழைப்பாளர் மனோஜ் குமார், பேராசிரியர், சேலம் வேளாண்மை அறிவியல் நிலையம் வளையமாதேவி ஆத்தூர், கலந்து கொண்டு மண் பரிசோதனை அவசியத்தையும் மண்புழு உரம் தொழு உரம் ஆகியவற்றின் பயன்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார். வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் ரமேஷ், கலந்து கொண்டு வேளாண் வாடகை இயந்திரங்கள் பற்றி விரிவாக கூறினார். உதவி வேளாண்மை அலுவலர்கள் மணி மாறன், சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டு துறை சார்ந்த திட்டங் களை எடுத்துக் கூறினார்கள். உதவி தொழில்நுட்ப மேலாளர் பிரபா நன்றி உரையாற்றினார். இதில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை உதவி தொழில் நுட்ப மேலாளர் சங்கர் செய்திருந்தார்.

# பள்ளிப் புதுப்பட்டு கிராமத்தில் ஆட்மா திட்டத்தின் மூலம் விவசாயிகள் பயிற்சி



விழுப்புரம், செப்.3

விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் ஒன்றியம், பள்ளிப் புதுப்பட்டு கிராமத் தில் வேளாண்மை உதவி இயக்குனர் Dr.பாலசுப்பிரமணியனின் வழிகாட்டு தலின்படி வேளாண்மை துறையில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டம் மூலம் சரிவிகித உர பயன்பாடு பயிற்சி நடத்தப்பட்டது. இப்பயிற்சிக்கு துணை வேளாண்மை அலுவலர் தமிழ்ச்செல்வன் முன்னிலை வகித்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் தேன்மொழி வரவேற் புரை அளித்தார். திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலை யத்தின் தொழில்நுட்ப வல்லுனர் முனைவர் செந்தமிழ், வேளாண் மையில் அங்கக உர பயன்பாடு உயிர் உரங்களின் முக்கியத்துவம்,

பயிர் சுழற்சியில் பயறு வகை பயிர்களின் சேர்க்கை, பஞ்சகாவியா தெளிப்பின் அவசியம், இயற்கை முறையில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை ஆகிய அம்சங்களை பயன்படுத்தி சாகுபடி செலவை குறைக்குமாறு அறிவுறுத்தினார்.

மேலும் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதில் அளித்தார். உதவி வேளாண்மை அலுவலர் சதஸ்ரீ, வேளாண் திட்டப் பணிகள் வேளாண் மானியங்கள் பற்றி விளக்கமாக கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் வீரமணி நன்றி கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் அருள் பாபு செய்திருந்தார்.



# அசோலா வளர்ப்பு – குறைந்த செலவில் கால்நடைத் தீவனம் மற்றும் கூடுதல் வருமானம்

**கால்நடை வளர்ப்பில் தீவனச் செலவைக் குறைக்க உதவும் அசோலா**

கால்நடை வளர்ப்பில் ஏற்படும் தீவனச் செலவைக் குறைத்து, கால்நடைகளுக்கு தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்கும் வகையில் அசோலா வளர்ப்பு ஒரு சிறந்த தொழில்நுட்பமாகும். குறைந்த இடத்திலும், குறைந்த செலவிலும் அசோலாவை உற்பத்தி செய்து கால்நடைகளுக்கு துணைத் தீவனமாக வழங்க முடியும். மேலும், அசோலாவை நெற்பயிரில் உயிர் உரமாகவும் பயன்படுத்தலாம்.

அசோலா நீரில் மிதந்து வேகமாக வளரும் ஒரு சிறிய நீர்த் தாவரமாகும். கால்நடைகளுக்குத் தேவையான அமினோ அமிலங்கள், தாது உப்புகள், வைட்டமின்கள் மற்றும் பீட்டா கரோட்டின் போன்ற சத்துக்கள் இதில் உள்ளன.

**அசோலாவில் உள்ள சத்துக்கள்**

அசோலாவில் சுமார் 25 - 30 சதவீதம் புரதச்சத்து, 14 - 15 சதவீதம் நார்ச்சத்து, 3 - 4 சதவீதம் கொழுப்புச்சத்து மற்றும் 45 - 50 சதவீதம் மாவுச்சத்து காணப்படுகிறது. இதனால் கால்நடைகளுக்கான துணைத் தீவனமாக அசோலா முக்கியத்துவம் பெறுகிறது. அசோலாவில் உள்ள வைட்டமின் A சத்து காரணமாக, அசோலாவை உட்கொள்ளும் கோழிகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. கால்நடைகளுக்கு அசோலாவைத் தீவனமாக வழங்குவதன் மூலம் பால் உற்பத்தி அதிகரிப்பதற்கும், பாலின் தரத்தை மேம்படுத்துவதற்கும் உதவுகிறது.

**பால் உற்பத்தியை அதிகரிக்க உதவும்**

அசோலாவை கால்நடைகளுக்குத் துணைத் தீவனமாக வழங்குவதன் மூலம் கறவை மாடுகளில் பால் உற்பத்தி அதிகரிக்கிறது. பால் கொழுப்புச்சத்து மற்றும் கொழுப்பு அல்லாத திடப்பொருட்களின் அளவும் அதிகரிப்பதால் பாலின் தரமும் மேம்படுகிறது. அசோலாவை உட்கொள்ளும் கோழிகளில் உடல் எடை அதிகரிப்பதுடன், முட்டையின் அளவும் அதிகரிப்பதாகவும், முட்டையின் மஞ்சள் கரு அடர்ந்த நிறத்தில் காணப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### குறைந்த செலவில் உற்பத்தி

ஒரு கிலோ அசோலாவை உற்பத்தி செய்ய சுமார் ரூ.0.75 மட்டுமே செலவாகும். அதே சமயம், ஒரு கிலோ புண்ணாக்கின் விலை சுமார் ரூ.40-45 வரை இருப்பதால், அசோலா குறைந்த செலவில் கிடைக்கும் சிறந்த துணைத் தீவனமாக பயன்படுகிறது. இதனால் கால்நடை வளர்ப்பில் தீவனச் செலவைக் குறைத்து, விவசாயி களின் நிகர வருமானத்தை அதிகரிக்க அசோலா உதவுகிறது.

### அசோலா வளர்க்கும் முறைகள்

அசோலாவை பல்வேறு முறைகளில் வளர்க்கலாம். அதிக ஆழமில்லாத நீர் தேங்கும் குட்டைகள், நெல் வயல், நெல் நாற்றங்கால், சிமெண்ட் தொட்டிகள் மற்றும் சில்பாலின் சீட் விரிக்கப்பட்ட குழிமுறை ஆகியவற்றில் அசோலாவை வளர்க்கலாம்.

### சிமெண்ட் தொட்டி முறை

சுமார் 10 அடி நீளம், 2 அடி அகலம் மற்றும் 1 அடி ஆழம் கொண்ட சிமெண்ட் தொட்டியில் 25-30 கிலோ மண்ணைப் பரப்ப வேண்டும். அதனுடன் 5 கிலோ நன்கு மக்கிய சாணத்தை கலந்து பரப்ப வேண்டும். 100 கிராம் சூப்பர் பாஸ்பேட் உரம் சீராக தூவவும். தொட்டியில் சுமார் 5 செ.மீ. உயரத்திற்கு தண்ணீர் இருக்குமாறு பராமரிக்க வேண்டும். இதில் சுமார் 5 கிலோ அசோலாவை விதைத் தால், இரண்டு வாரங்களில் சுமார் 35-40 கிலோ அசோலாவை சேகரிக்க முடியும். மேலும், 10 நாட்களுக்கு ஒரு முறை சாணக் கரைசலைச் சேர்க்க வேண்டும்.

### நெல் வயலில் அசோலா

அசோலாவை நெல் வயலிலும் வளர்க்கலாம். ஒரு சென்ட் நிலத்திற்கு சுமார் 1 கிலோ அசோலா என்றளவில் இட்டு, வயலில் சுமார் 5 செ.மீ. நீர் நிறுத்தினால், இரண்டு வாரங்களுக்குள் அந்த இடம் முழுவதும் அசோலா வளர்ந்து விடும்.

### அசோலா ஒரு உயிர் உரம்

அசோலா கால்நடைத் தீவனமாக மட்டுமின்றி, சிறந்த உயிர் உரமாகவும் பயன்படுகிறது. காற்றில் உள்ள தழைச்சத்தை நிலை நிறுத்தும் திறன் அசோலாவிற்கு உள்ளது. அசோலாவில் சுமார் 4.5 சதவீதம் தழைச்சத்து இருப்பதால், நெற்பயிரில் ஒரு ஏக்கருக்கு சுமார் 200 கிலோ அசோலா பயன்படுத்தலாம். இதன் மூலம் பயிருக்கு தழைச்சத்து கிடைப்பதுடன், மகசூல் அதிகரிக்க உதவுகிறது.

### கால்நடைகளுக்கு வழங்கும் அளவு

அசோலாவை கால்நடைகளுக்கு வழங்கும் போது படிப்படியாக

பழக்கப்படுத்த வேண்டும். வழக்கமான அடர் தீவனத்துடன் அசோலாவை கலந்து வழங்கலாம். நன்கு பழக்கப்பட்ட பின்னர் கறவை மாடுகள் அசோலாவை தனியாகவும் உட்கொள்ளும்.

**பரிந்துரைக்கப்பட்ட அளவுகள் : கறவை மாடு :** நாளொன்றுக்கு 1 – 1.5 கிலோ, **வெண் பன்றி :** 1 – 1.5 கிலோ, **ஆடு :** 300–500 கிராம், **முயல் :** 100 கிராம், **கோழி :** 25 – 30 கிராம்.

**சில்பாலின் படுக்கை முறையில் அசோலா வளர்ப்பு**

அசோலாவை சில்பாலின் சீட் விரிக்கப்பட்ட படுக்கையிலும் எளிதாக வளர்க்கலாம். சுமார் 10 அடி நீளம், 2 அடி அகலம் மற்றும் 1 அடி ஆழம் கொண்ட இடத்தில் படுக்கை அமைக்க வேண்டும். சில்பாலின் சீட்டை விரித்து, அதன் மேல் சுமார் 1 செ.மீ. அளவு வளமான மண்ணைப் பரப்பி சமப்படுத்த வேண்டும். பின் தண்ணீர் சேர்த்து, தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்கி, சாணக் கரை சலைச் சேர்க்க வேண்டும். ஒரு படுக்கைக்கு சுமார் 5 கிலோ அசோலா தாய் விதைப்பொருளை தூவி வளர்க்கலாம். சுமார் 10 நாட்களுக்கு பின் படுக்கை முழுவதும் அசோலா வளரத் தொடங்கும்.

**அறுவடை மற்றும் பராமரிப்பு**

அசோலா வேகமாகப் பெருகுவதால், சுமார் 10–15 நாட்களுக்குப் பின் அறுவடை செய்யலாம். படுக்கையில் உள்ள அசோலாவின் மூன்றில் ஒரு பங்கை மட்டும் விட்டுவிட்டு, மீதமுள்ள இரண்டு பங்குகளை அறுவடை செய்யலாம். இதன் மூலம் மீத முள்ள அசோலா தொடர்ந்து பெருகி அடுத்தடுத்த அறுவடைக்கு பயன்படும். அறுவடை செய்யப்பட்ட அசோலாவை கால்நடைகளுக்கு வழங்கு வதற்கு முன்பு நன்றாகக் கழுவி பயன்படுத்துவது அவசியம்.

**ஒருங்கிணைந்த பண்ணையத்தில் அசோலாவின் முக்கியத்துவம்**

ஒருங்கிணைந்த பண்ணைய முறையில் பயிர் சாகுபடி, கால்நடை வளர்ப்பு மற்றும் அசோலா உற்பத்தி ஆகியவற்றை இணைத்துச் செயல்படுத்துவதன் மூலம் பண்ணையில் உள்ள வளங்களை மறுசுழற்சி செய்து பயன்படுத்த முடியும். அசோலா தயாரித்தல் விவசாயிகளுக்கு வருமானம் தருவதுடன் சுற்றுச்சூழல் பாது காப்பிற்கும் உதவுகிறது.

அசோலா வளர்ப்போம், தீவனச் செலவைக் குறைப்போம், கால்நடை உற்பத்தியைப் பெருக்குவோம், விவசாய வருமானத்தை உயர்த்துவோம்.

தகவல் : ***மு.புனிதாவதி, தொழில்நுட்ப வல்லுநர் (உழவியல்), ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையம், வாலிகண்டபுரம், பெரம்பலூர் – 621 115. கைபேசி எண் : 88382 55728.***

Rithvik Pipe

IS 4985 : 2021 IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# நிலக்கடலையில் மகசூல் அதிகரிக்க உதவும் விழுது உருவாக்கம் (PEG FORMATION)



நிலக்கடலையில் பூ அதிகமாக வந்தாலே மகசூல் அதிகமாகும் என்று பல விவசாயிகள் நினைக்கலாம். ஆனால் அது முழுமையாக சரி இல்லை. நிலக்கடலையில் பூ பூத்த பிறகு அந்த பூவின் அடிப் பகுதியிலிருந்து, ஒரு மெல்லிய காம்பு (விழுது) உருவாகும். இதைத்தான் பெக் (PEG FORMATION) என்பார்கள்.

**விழுது உருவாக்கம் ஏன்? எப்படி?**

இந்த விழுதுகள் (மெல்லிய தண்டு) பெக் மண்ணுக்குள் நுழைந்த பிறகு தான் அதன் நுனியில் காய் உருவாக ஆரம்பிக்கும். அதனால் பூக்கும் காலம் நிலக்கடலை சாகுபடியில் மிகவும் முக்கியமானதாகும்.

**நிலத்தின் மண் எப்படி இருக்க வேண்டும்?**

இந்த நேரத்தில் மண் மிகவும் இருகி இருந்தாலும் அல்லது நீர் தேங்கி சேறாக இருந்தாலும் பெக் (விழுது) மண்ணுக்குள் எளிதாக செல்ல முடியாது. அதன் விளைவாக பூக்கள் அதிகமாக இருந்தாலும் காய் பிடிப்பு குறைவாக இருக்கும். அதே போல பூக்கள் பூக்கும் காலத்தில் தேவையில்லாமல் ஆழமாக களை எடுப்பது, மண்ணை அதிகமாக கிளறுவது போன்ற செயல்கள் பெக் வளர்ச்சியை பாதிக்கும்.

**கவனிக்க வேண்டியவை என்ன?**

1) மண் இலகுவாக ஈரப்பதத்துடன் இருக்க வேண்டும்.

2) இரண்டாம் களை எடுத்த பின் ஜிப்சம் உரத்தை செடியின் அடிப்பகுதியில் தூவி விட வேண்டும். நீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். செடியின் அடிப்பகுதியை அதிகமாக கிளறாமல் இருக்க வேண்டும்.

3) நிலக்கடலையில் பூ பூப்பது முதல் கட்டம் மட்டுமே. அந்த பூவிலிருந்து உருவாகும் பெக் பாதுகாப்பாக மண்ணுக்குள் சென்று காயாக மாறுவது தான் மகசூலை தீர்மானிக்கிறது.

நிலக்கடலையில் பூக்களின் எண்ணிக்கை மகசூலை தீர்மானிக்காது. காயாக மாறும் பூக்களின் எண்ணிக்கையே மகசூலை தீர்மானிக்கும்.

விவசாயம் பழுமையானது தான், சின்ன சின்ன தொழில்நுட்பங்களால் அதிகமான மகசூலை (விளைச்சலை) பெறலாமே.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மூலம் ரசாயன உர பயன்பாட்டினை குறைத்திடும் பயிற்சி




விழுப்புரம், செப்.3

விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டாரம், வேளாண்மை துறை ஆத்மா திட்டத்தின் கீழ் குரூர் கிராமத்தில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மூலம் ரசாயன உர பயன் பாட்டினை குறைத்திடும் முறைகள் குறித்து விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் பயிர்களுக்கு தேவையான ஊட்டச் சத்தினை பசுந்தால் உர பயிர்களான தக்கை பூண்டு, சனப்பு, கொழிஞ்சி விதைப்பு செய்து பூக்கும் முன் அவற்றை மடக்கி உழவு செய்வது, திரவ நுண்ணுயிர்களான அசோஸ்பைரில்லாம், பாஸ்போ பாக்டீரியா, ரைசோபியம் பயன்படுத்துவது மூலம் தழைச்சத்தினை மண்ணில் நிலை நிறுத்தி வைக்கவும், பயிர் வேர்களுக்கு கிடைக்காத நிலையில் உள்ள மணிச்சத்தினை கிடைக்க செய்யவும், மண்ணில் உள்ள சாம்பல்சத்தினை திரட்டி பயிரின் வேர்களுக்கு கிடைக்கவும் பயன்படுத்துவது, மண்புழு உர உபயோகம் குறித்தும் எடுத்துக் கூறப்பட்டது. இதன் மூலம் விவசாயிகள் மண்வளத்தை பாதுகாத்தும் ரசாயன உர உபயோகத்தை குறைத்தும் சாகுபடி மேற்கொள்ளலாம். இப்பயிற்சியில் திண்டிவனம் அறிவியல் நிலைய பேராசிரியர்கள் சிபி செபஸ்டின் காஞ்சனா மற்றும் ஷீபா ஆகியோர் பயிற்சி அளித்தனர். வட்டார தொழில்நுட்ப மேலாளர் நரசிம்மராஜ், உதவி வேளாண்மை அலுவலர் ஆஷா, ஆத்மா உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சந்திர சேகர் மற்றும் அய்யனார் ஆகியோர் பயிற்சிக்கு ஏற்பாடு செய்து கலந்து கொண்டனர்.

# மின்னணு கணக்கெடுப்பில் விவசாயிகளின் பயிர் சாகுபடி பதிவேற்றம்

## எல்லாபுரம் உதவி இயக்குநர் தகவல்

திருவள்ளூர், செப்.3

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஆ.உமா மகேஸ்வரி கூறியதாவது, எல்லாபுரம் வட்டாரத்தில் நடப்பாண்டு காரிப் பருவத்திற்கான மின்னணு பயிர் கண்கெடுப்பு பணி வேளாண்மை துறை சார்பில் ஜீலை 1 ம் தேதி முதல் நடைபெற்று வருகிறது. இந்த பணிகளை அந்தந்த வருவாய் கிராமத்தை சேர்ந்த தன்னார்வலர்கள் மற்றும் வேளாண்மை, தோட்டக்கலை துறை அலுவலர்கள் மேற்கொண்டு வருகின்றனர். எல்லாபுரம் வட்டாரத்தில் உள்ள 78 வருவாய் கிராமங்களில் இந்த பருவத்தில் கணக்கெடுப்பு செய்ய மேலும் தன்னார்வலர்கள் தேவைப்படுகிறார்கள். மின்னணு பயிர் கணக்கெடுப்பு பணியை மேற்கொள்ள ஆன்ட்ராய்டு மொபைல் பயன்படுத்த தெரிந்த ஆர்வமுள்ள விவசாயிகள், இளைஞர்கள், தன்னார்வலர்கள் பங்கு பெறலாம். இவ்வாறு பயிர் கணக்கெடுப்பு செய்வதால் விவசாயிகளுக்கு பயிர் வாரியாக அரசு திட்ட மானிய உதவி பெற உதவியாக இருக்கும்.

பயிர் சாகுபடி பரப்புக்கு ஏற்றவாறு விவசாயிகளுக்கு எளிதில் அரசு மானியங்கள், பயிர் கடன்கள், பயிர் காப்பீடு, இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் இழப்பீடுகள் வழங்க இயலும். விவசாயிகள் தங்களின் வயலில் சாகுபடி செய்து உள்ள பயிர்களை தாங்களாகவே பதிவு செய்வதற்கு நம்ம வயல்

### ஊக்க தொகை எவ்வளவு?

ஒவ்வொரு சர்வே உட்பிரிவுக்கும் ஊக்கதொகை வழங்கப்படும். அதாவது தரிசு நிலத்தை பதிவு செய்ய ஒரு சர்வே உட்பிரிவுக்கு ரூ.3ம், ஒரு சர்வே உட்பிரிவில் ஒரே ஒரு பயிர் மட்டும் இருந்து பதிவு செய்தால் ரூ.5ம், அதே சர்வே உட்பிரிவில் கூடுதல் ஒவ்வொரு பயிருக்கும் ரூ.2 (அதிகபட்சமாக ஒரு உட்பிரிவுக்கு ரூ.9 வரை), மற்றும் மலைபாங்கான கிராமங்களுக்கு ஒரு உட்பிரிவுக்கு ரூ.10ம் ஊக்கதொகை வழங்கப் படும்.

செயலி உருவாக்கப்பட்டுள்ளது. நம்ம வயல் செயலியில் உள் நுழைந்தவுடன் விவசாய அடையாள எண்ணில் பதிவு செய்துள்ள சர்வே உட்பிரிவுகளை பார்க்கலாம். இதன் மூலம் ஏதேனும் தங்களுடைய நிலத்தின் சர்வே எண் உட்பிரிவு எண் விடப்பட்டு இருந்தால் உடனே எல்லாபுரத்தில் உள்ள வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம்.

மேலும் விவரங்களுக்கு துணை வேளாண்மை அலுவலர் சிவகுமார் என்பவரை 95511 05034 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் அதில் தெரிவித்துள்ளார்.



# நுண்கீரைகள் – சக்தி வாய்ந்த உணவு



திருப்பூர், செப்.3

திருப்பூர் எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலைக் கல்லூரியின் தாவரவியல் துறை சார்பில், நுண்கீரைகள் – சக்தி வாய்ந்த உணவு – என்ற தலைப்பில் கருத்தரங்கம் இன்று 31.08.26 அன்று கலையரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு துறைத் தலைவர் முனைவர் த.பாலசரவணன், தாவரவியல்வர்கள் ஒருங்கிணைப்புச் செயலாளராகச் செயல் பட்டார். கல்லூரி முதல்வர் முனைவர் உ.சுமதி இக்கருத்தரங் கிற்கு தலைமை தாங்கினார். கருத்தரங்கில் கோயம்புத்தூர் ஸ்ரீ சக்தி பொறியியல் கல்லூரியின் உதவிப் பேராசிரியரும் வேளாண் பொறியாளருமான தி.யுவராஜ தட்சணமூர்த்தி கலந்து கொண்டு, மண்புழு உரம் தயாரித்தல், அதன் பயன்கள் மற்றும் நுண்கீரை வளர்ப்பில் அதன் பயன்பாடு குறித்து விளக்கினார்.

மேலும், நுண்கீரைகளின் சிறப்புகள், மண் மூலம் அவற்றை வளர்க்கும் முறை, வளர்ப்புத் தட்டுகளின் பயன்பாடு, விதைத் தேர்வு, நீர் மேலாண்மை மற்றும் அறுவடை முறைகள் குறித்து மாணவியர்களுக்கு தெளிவாக எடுத்துரைத்தார். நுண்கீரை களில் உள்ள வைட்டமின்கள், தாதுப்பொருள்கள் மற்றும் பிற ஊட்டச்சத்துக்கள் குறித்தும், அவற்றை அன்றாட உணவில் சேர்த்துக் கொள்வதன் பயன்கள் குறித்தும் விளக்கப்பட்டது. மேலும், குறைந்த இடத்திலும் குறைந்த முதலீட்டிலும் நுண்கீரை களை வளர்த்து, அவற்றை முறையாக விற்பனை செய்வதன் மூலம் பெண்கள் சுயதொழில் மற்றும் தொழில்முனைவோர் வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ளலாம் என்றும் எடுத்துரைத்தார்.

இக்கருத்தரங்கம் மாணவியர்களுக்கு இயற்கை வேளாண்மை, ஆரோக்கியமான உணவு மற்றும் தொழில் முனைவோர் வாய்ப்புகள் குறித்த பயனுள்ள அறிவை வழங்கும் வகையில் சிறப்பாக அமைந்தது.

# நெல் வயல் வெளிப்பள்ளி




திருவாரூர், செப்.3

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டாரம், ஏரி கிராமத்தில் மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம், திருச்சி சார்பில் விவசாயிகளுக்கான நெல் வயல் வெளிப்பள்ளியின் துவக்க விழா நடைபெற்றது.

நிகழ்ச்சியில் துவக்க உரையாற்றிய M.அமுதா, பயிர் பாதுகாப்பு அலுவலர், பயிற்சியை பற்றி தெளிவாக எடுத்துரைத்தார். இந்த பயிற்சியானது வாரம் ஒரு முறை நெல்லில் உள்ள அனைத்து விதமான பயிர் பாதுகாப்பு சார்ந்த பிரச்சனைகள், விதை நேர்த்தி, மண் பரிசோதனை, உர நிர்வாகம், நீர் நிர்வாகம், அறுவடைக்கு பிந்தைய தொழில் நுட்பம் அனைத்தும் விரிவாக விவாதிக்கப்படும்என்றுகூறினார். அடுத்து உரையாற்றிய நிஷிந்தா, உதவி பயிர் பாதுகாப்பு அலுவலர் , மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மைய செயல்பாடுகள், வயல் வெளிப்பள்ளியின் நோக்கம் மற்றும் பூச்சிக்கொல்லியினால் ஏற்படும் தீமைகள் பற்றி விரிவாக விளக்கமளித்தார்.மேலும் இந்நிகழ்ச்சியில் தமிழக வேளாண் துறை, வலங்கைமான் வட்டாரத்தை சேர்ந்த சரவணன், உதவி வேளாண் அலுவலர் தமது உரையில் தற்போது இருப்பு வைக்கப்பட்டுள்ள நெல் ரகங்களை பற்றி விரிவாக விளக்கம் அளித்தார். துவக்க விழாவின் நிறைவில் ராஜேஸ்வரி, உதவி பயிர் பாதுகாப்பு அலுவலர் பயிற்சியில் கலந்து கொண்ட அனைவர்க்கும் நன்றி கூறினார். பயிற்சியில் 35 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கான தொழில்நுட்ப ஏற்பாடுகளை மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம், திருச்சியை சேர்ந்த அபின், தொழில் நுட்ப அலுவலர் செய்திருந்தார்.

# நுண்கீரை உற்பத்தி முறைகள் மற்றும் மதிப்பூட்டுதல் தொழில்நுட்பங்கள் மூலம் தொழில்முனைவோர் உருவாக்குதல் பற்றிய செயல்விளக்கப் பயிற்சி



கன்னியாகுமரி, செப்.3 கன்னியாகுமரி மாவட்டம், திருப்பதிசாரம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நுண்கீரை உற்பத்தி மற்றும் மதிப்பூட்டுதல் தொழில்நுட்பங்கள் மூலம் தொழில் முனைவோர் உருவாக்குதல் பற்றிய செயல்விளக்கப் பயிற்சி 03.09.26 அன்று காலை 10.00 மணியளவில் நடைபெற்றது.

இத்தொழில்முனைவோர் இச்செயல்விளக்க பயிற்சியில் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் சா.சுரேஷ், துவக்கவுரையாற்றி நுண்கீரையின் முக்கியத்துவம் குறித்தும் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் செயல்பாடுகள் பற்றி எடுத்துரைத்தார். முனைவர் ஜெ.செல்வி, உதவிப் பேராசிரியர் (உணவியல் மற்றும் சத்தியல் துறை) நுண்கீரை உற்பத்தி தொழில்நுட்பங்கள், ஏற்ற விதைகள், விதைப்பு முறைகள், பயிரிடும் முறைகள், நுண்கீரை வளர்ச்சி நிலைகளின் தொழில்நுட்பங்கள் குறித்து செயல்விளக்கத்துடன் எடுத்துரைத்தார். மேலும் இப்பயிற்சியில் நுண்கீரைகளில் உள்ள சத்துக்கள், ஆரோக்கிய நன்மைகள் குறித்தும், அறுவடைபின் சார் மேலாண்மை மற்றும் நுண்கீரை களிலிருந்து மதிப்பூட்டபட்ட சத்தான உணவுப்பொருட்கள் தயாரித்தல் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

இத்தொழில்முனைவோர் இச்செயல்விளக்க பயிற்சியில் 10 பண்ணை மகளீர்கள், சுய உதவிகுழு உறுப்பினர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் கலந்து கொண்டு நுண்கீரை உற்பத்தி முறைகள் மற்றும் மதிப்பூட்டுதல் தொழில்நுட்பங்கள் பற்றி தெரிந்து கொண்டு பயனடைந்தார்கள்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

**Rithvik Pipe**

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# நானோ விழிப்புணர்வு கருத்தரங்கம்



ஈரோடு, செப்,3

ஈரோடு மாவட்டம், வெம்பத்தி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் (PACCS) நானோ விழிப் புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந் நிகழ்வில் கலந்து கொண்ட விவசாயி களுக்கு இப்கோ திரவ உரங்களான நானோ யூரியா, நானோ டி.ஏ.பி, சாகரிகா திரவம், சாகரிகா குருணை உரம் மற்றும் நீரில் கரையும் உரங்கள் (WSF) ஆகியவற்றின் முக்கியத்துவம், பயன்பாடு மற்றும் பயன்கள் குறித்து இப்கோ கள அலுவலர் வினோத் விளக்கமளித் தார். மேலும், நானோ உரங்களை பயிர்களில் தெளிக்கும் முறைகள் மற்றும் பூச்சிக்கொல்லிகளுடன் பயன்படுத்தும் முறைகள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது.

தொடர்ந்து, சங்கட் ஹரண் பீமா யோஜனா திட்டம் குறித்து விளக்கப்பட்டதுடன், நிலையான வேளாண்மைக்கு மண் வளத்தைப் பாதுகாத்து, மண் ஆரோக்கியத்தைத் தொடர்ந்து பராமரிப்பதில் உயிர் உரங்கள் மற்றும் பயோ டிகம்போசரின் முக்கியத்துவமும் வலியுறுத்தப்பட்டது. நிகழ்ச்சியில் 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு, இனி தங்கள் பயிர்களில் இப்கோ நானோ உரங்களைப் பயன்படுத்துவதாக மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

# அறுவடைக்கு பின் மேலாண்மை மற்றும் மதிப்பு கூட்டல் பயிற்சி

ஈரோடு, செப்.3

ஈரோடு வட்டாரம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, கீழ் செயல்படும் வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் விவசாயிகளுக்கு அறுவடைக்கு பின் மேலாண்மை மற்றும் மதிப்பு கூட்டல் பற்றிய பயிற்சி நடைப்பெற்றது.

இது குறித்து ஈரோடு மற்றும் சென்னிமலை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சி.சசிகலா அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது, ஈரோடு வட்டாரம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, கீழ் செயல்படும் வட்டார தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் எலவமலை கிராமத்தில் விவசாயிகளுக்கு அறுவடைக்கு பின்




மேலாண்மை மற்றும் மதிப்பு கூட்டல் பற்றிய பயிற்சி நடைப் பெற்றது. இந்த பயிற்சியினை வேளாண்மை அலுவலர் தி.நிவேதா, தலைமை ஏற்று துவக்கி வைத்து வேளாண்மை துறையின் மூலம் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்கள் பற்றிய விபரங்களை தெளிவாக எடுத்துரைத்தார். மேலும் விவசாயிகளுக்கு அறுவடைக்கு பின் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை சந்தைப்படுத்தும் முறைகளை தெளிவாக எடுத்துரைத்தார்.

வேளாண் அறிவியல் நிலையம், கோபிசெட்டிபாளையம், விஞ்ஞானி மா.சிவா, அறுவடைக்கு பின் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை எவ்வாறு தயாரிப்பது அவற்றை எவ்வாறு சந்தைப் படுத்துவது, வாழைப்பூவில் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களான வாழைப்பூ வடை மற்றும் வாழைப்பூ தொக்கு தயாரிக்கும் முறைகளை செயல்விளக்கமாக செய்து செயல்முறைகளை விளக்கமாக கூறினார். வாழைநார் மூலம் பைகள் செய்யும் முறைகளையும் தெளிவாக எடுத்துரைத்தார். குமரகுரு வேளாண்மை கல்லூரி பேராசிரியர் முனைவர் இளங்கோ, அறுவடைக்கு பின்பு தானியங்கள் மற்றும் பருப்பு வகைகளில் பூச்சி வராமல் பாதுகாப்பது எவ்வாறு என்பதை பற்றிய விபரங்களை தெளிவாக எடுத்துரைத்தார்.

வேளாண் வணிகத் துறையின் சார்பில் வேளாண்மை அலுவலர் ப.அபிநயா, மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை சந்தைப்படுத்தும் முறைகளை தெளிவாக எடுத்துரைத்தார். மேலும் உழவர் சந்தை செயல்படும் முறைகளை தெளிவாக எடுத்துரைத்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.சா.கிருத்திகா, அட்மா திட்டங்களின் செயல்பாடுகள் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார். உதவி வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.செங்கோட்டையன் உழவன் செயலி மூலம் இடுபொருட்கள் பதிவு செய்யும் முறைகளை தெளிவாக எடுத்துரைத்தார்.



# சமச்சீர் உர பயன்பாடு மற்றும் உர பயன்பாட்டுத்திறன் குறித்த விவசாயிகள் பயிற்சி



ஈரோடு, செப்.3

ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டாரம், வேளாண்மைத் துறை கீழ், செயல்படும் வட்டார தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் நாகம நாய்க்கன்பாளையம் வருவாய் கிராமத்தில் உழவர்களுக்கு சமச்சீர் உர பயன்பாடு மற்றும் உர பயன் பாட்டுத்திறன் குறித்த விவசாயிகள் பயிற்சி (Balanced Use of Fertilizer & Fertilizer Use Efficiency) நடைப்பெற்றது. இந்த பயிற்சியில் NI.NI.கே.எம் கல்லூரி பேரா சிரியர் டாக்டர். மோகன்குமார், உரம் பயன்பாடு பற்றியும் உரத்தின் பயன்கள் மற்றும் இயற்கை உரங்கள் பயன்படுத்தும் முறைகள் பற்றி விரிவாக எடுத்து கூறினார். மேலும் கரும்பு, தென்னை, மஞ்சள் பயிர்களுக்கு பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாடு மற்றும் மஞ்சளின் உற்பத்தி திறனை அதிகரிக்கும் வழிமுறைகள் பற்றி தெளிவாக கூறினார். மேலும் சமச்சீரான உர பயன்பாட்டை மேற் கொள்வதன் மூலம் நிலையான வேளாண் மையை ஊக்குவித்தல், மண்ணின் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல் குறித்து விளக்கம் அளித்தார். இந்த பயிற்சியில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் ரேணுகா மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளார்கள் மஞ்சுரேகா, சிதம்பரம் ஆகியோர் செய்திருந்தனர்.

# விதைப்பரிசோதனை அவசியம்

சேலம், செப்.3

உலகத்தாருக்கு உணவு வழங்கும் முதன்மையான தொழிலை செய்து வரும் சேலம் மாவட்ட விவசாய பெருமக்களே 'வித்தே விளைச்சலின் ஆதாரம்' என்ற பழமொழிக்கேற்ப நல்வித்தே தேவை படும், இடுபொருட்களை எடுத்துக் கொண்டு தரமான மற்றும் அதிக மகசூலை தரவல்லது. தற்போது சேலம் மாவட்டத்தில் குறுகிய கால நெல் ரகங்களுக்கு அதிகப்படியான தேவையுள்ளதால், இத்தகைய குறுகிய கால உண்மை நிலை நெல் ரகங்களை விற்பனை செய்யும் விற்பனையாளர்களும், அவற்றை வாங்கும் விவசாயிகளும் விதை பகுப்பாய்வில் தேறியுள்ளதா என்று பார்த்து விற்பனை செய்ய வேண்டும் / வாங்க வேண்டும். நெல் விதைகளின் குறைந்தபட்ச முளைப்புத்திறன் தேவை 80%ம், சுத்தத்தன்மை 98%ம் மற்றும் பிறரக கலப்பு அதிகபட்சமாக 0.20 சதவிகிதம் இருக்கலாம்.

மேற்கூறிய மூன்று சோதனைகளை செய்ய, விதை விற்பனையாளர்கள் தங்களிடம் உள்ள ஒவ்வொரு விதைக்குவியலில் இருந்தும் 400 கிராம் விதையினை எடுத்து விண்ணப்பக் கடிதத்துடன் இணைத்து அறை எண் 403, நான்காவது தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சேலம் 636 001 என்ற முகவரியில் இயங்கி வரும் விதைப்பரிசோதனை ஆய்வகத்திற்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி பரிசோதனை முடிவுகளை அறிந்து கொள்ளலாம். ஒரு மாதிரியின் பகுப்பாய்வுப் பரிசோதனைக் கட்டணமாக ரூ.80/- செலுத்த வேண்டும் என வேளாண்மை அலுவலர்கள் பெ.கவிதா, மு.நந்தினி தெரிவித்தனர்.



# அட்மா திட்டத்தில் மாவட்ட அளவிலான பயிற்சி




சேலம், செப்.3

சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டாரம் சின்னகுட்டி மடுவு கிராமத்தில் அட்மா திட்டத்தின் சார்பில் மாவட்ட அளவிலான பயிற்சி 02.09.26 அன்று அங்கக மற்றும் இயற்கை வேளாண்மை என்ற தலைப்பில் பயிற்சி நடைபெற்றது.

இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளராக பழனியப்பன், வேளாண்மை இணை இயக்குனர் (ஓய்வு), அங்கக மற்றும் இயற்கை விவசாயத்தின் அவசியம் மற்றும் தொழில்நுட்பங்கள் எடுத்துரைத்தார். வாழப்பாடி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் கண்ணன், இயற்கை விவசாய இடுபொருட்கள் தயாரிப்பு பற்றிய தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சந்திர சேகரன் அனைத்து விவசாயிகளையும் வரவேற்று பேசினார் மற்றும் மண்வள மேலாண்மை பற்றி எடுத்துக் கூறினார்.

பயிற்சியில் கலந்து கொண்ட ஒவ்வொரு விவசாயிக்கும் ஊக்கத்தொகை ரூ.250 அவர்களுடைய வங்கி கணக்கிற்கு ஹிசிய்வீ மூலம் வழங்கப்பட்டது மற்றும் மதிய உணவு, சிற்றுண்டி வழங்கப்பட்டது. விழாவிற்கான ஏற்பாடுகளை உதவி தொழில் நுட்ப மேலாளர்களான திலகவதி மற்றும் அருண்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.



# நெல் வயல் வெளிப்பள்ளி




தஞ்சாவூர், செப்.3

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டாரம், வீரமாங்குடி கிராமத்தில் மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம், திருச்சி சார்பில் விவசாயிகளுக்கான நெல் வயல் வெளிப்பள்ளியின் துவக்க விழா நடைபெற்றது.

நிகழ்ச்சியில் துவக்க உரையாற்றிய M.அமுதா, பயிர் பாதுகாப்பு அலுவலர், பயிற்சியை பற்றி தெளிவாக எடுத்துரைத்தார். இந்த பயிற்சியானது வாரம் ஒரு முறை நெல்லில் உள்ள அனைத்து விதமான பயிர் பாதுகாப்பு சார்ந்த பிரச்சனைகள், விதை நேர்த்தி, மண் பரிசோதனை, உர நிர்வாகம், நீர் நிர்வாகம், அறுவடைக்கு பிந்தைய தொழில் நுட்பம் அனைத்தும் விரிவாக விவாதிக்கப்படும் என்றுகூறினார். அடுத்து உரையாற்றிய அபின், தொழில்நுட்ப அலுவலர், மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மைய செயல்பாடுகள், வயல் வெளிப்பள்ளியின் நோக்கம் மற்றும் பூச்சிக் கொல்லியினால் ஏற்படும் தீமைகள் பற்றி விரிவாக விளக்கமளித்தார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் தமிழக வேளாண் துறை, பாபநாசம் வட்டாரத்தை சேர்ந்த விஜயகுமார், உதவி வேளாண் அலுவலர் தமது உரையில் தற்போது இருப்பு வைக்கப்பட்டுள்ள நெல் ரகங்களை பற்றி விரிவாக விளக்கம் அளித்தார். துவக்க விழாவின் நிறைவில் நிஷிந்தா, உதவி பயிர் பாதுகாப்பு அலுவலர், பயிற்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார். பயிற்சியில் 35 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கான தொழில்நுட்ப ஏற்பாடுகளை மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம், திருச்சியை சேர்ந்த ராஜேஸ்வரி, உதவி பயிர் பாதுகாப்பு அலுவலர் செய்திருந்தார்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333